# J/KAYTS ST.MARY'S R.C GIRLS' VIDYALAYAM

# PRIZE DAY - 2017



2017.07.04

# நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினரை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வருதல்.
- தேசியக்கொடியேற்றலும் தேசிய கீதம் இசைத்தலும்.
- பாடசாலைக்கொடியேற்றலும் கீதம் இசைத்தலும்.
- மங்கல விளக்கேற்றல்.
- இறைவணக்கம்.
- வரவேற்பு நடனம்.
- வரவேற்புரை.
- ஆசியுரை.
- அதிபர் அறிக்கை.
- பரிசில்கள் வழங்கல்.
- கலை நிகழ்வுகள்.
- கௌரவவிருந்தினர் உரை.
- கலை நிகழ்வு.
- கௌரவவிருந்தினர் உரை
- கலை நிகழ்வுகள்.
- சிறப்பு விருந்தினர் உரை.
- கலை நிகழ்வுகள்.
- பிரதம விருந்தினர் உரை.
- நன்றியுரை.
- தமிழ்த்தாய் வாழ்த்து.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

# J/KAYTS ST.MARY 'S R.C GIRLS' VIDYALAYAM

## Prize Day 2017

On Tuesday 4th of July at 9.30 am

**Chair person**
REV.SR.GRACE MARY STANISLAUS
(Our Principal)

**Chief Quest**
Mr.N.Vinthan Kanagaratnam
(Honourable Member of Northern Provincial Council)

**Special Quest**
Rev.Fr.James Singarayar
(Rector St.Antony's Colleage,Kayts)

**Quest of Honour**
Rev . Fr. P.F.Rajasingam
(Parish Priest,Kayts)
Mr. M.Sathiyaseelan
(DEO Kayts)

Mrs. Manoharan Mary sajila
(Old girl)
You are kindly invited.

**The principal**
**Teacher&Student**

# யா / ஊர். புனித மரியாள் றோ.க பெண்கள் வித்தியாலயம்.

**மகுட வாசகம்**

நன்றே கற்போம் நலமே வாழ்வோம்.

## School Vision

"We Commit ourselves to grow in loving relationship with God and people and to be atrong and vigilant in unexpected and complicated situation."

## பாடசாலையின் நோக்கக் கூற்று

"சிக்கலானதும் எதிர்பாராததுமான சூழ்நிலைகளில் விழிப்புணர்வும் பலமும் கொண்டவர்களாக இருந்து இறைவனோடும் மக்களோடும் நெருங்கிய அன்புறவை வளர்க்க எம்மை அர்ப்பணிப்போம்."

## School Mission

"We educate the young girls for better life in Cultivating the Holy Family values of genteleness, Humility and obedience."

## பணிக்கூற்று

"இளம் பெண்களின் நல்வாழ்வுக்காக சாந்தம்,தாழ்ச்சி, கீழ்ப்படிவு போன்ற திருக்குடும்பத்தின் விழுமியங்களை விருத்தி செய்வதற்கான கல்வியை அவர்களுக்கு ஊட்டுவோம்."

# 2016ம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கை

இங்கிதமான இனிய காலைவேளையிலே 146 ஆண்டு காலக் கல்விச் சேவையால் முதிர்ந்து வெற்றிச்சாதனைகளோடு நிமிர்ந்து நிற்கின்றஅன்னை மரியாளின் பெயரைத் தாங்கிய எமது பாடசாலைத்தாயின் பாதாரவிந்தங்களில் பணிந்துகொண்டு இவ்வரங்கையும் மண்டபத்தையும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் பெருந்தகைகளே, நிகழ்வின் பிரதமவிருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே, கௌரவவிருந்தினர்களே, விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் அதிபர்களே, ஆசிரியர்களே, ஏனைய அரச, அரசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களே, கல்விசாரா ஊழியர்களே, எங்கள் பாடசாலையின் ஊட்டமாய் திகழ்கின்ற அன்பான பெற்றோர்களே! பழையமாணவர்களே, பாடசாலையின் வளர்ச்சியில் அதீத அக்கறை செலுத்திவரும் நலன்விரும்பிகளே! பாசமிகு மாணவச் செல்வங்களே முதலில் உங்கள் அனைவருக்கும் இனிதான வந்தனங்களைத் தெரிவித்துக்கொண்டு எனது அகம் மலர்ந்து உங்களை இருகரம் குவித்து வரவேற்று இவ்வாண்டின் அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடை-கின்றேன்.

இன்றைய பரிசில் தினவிழாவிற்கு எம்மைப்பெருமைப்படுத்தி நிகழ்வைச் சிறப்பிக்க முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ வடமாகாண சபை உறுப்பினர் திரு.என்.விந்தன் கனகரட்ணம் அவர்களே! நெடுந்தீவு மண்ணில் உதித்து ஆரம்பக் கல்வியை செவ்வனே முடித்துக்கொண்டு தங்களது உயர்கல்விக்காக இந்தியாவிற்குச்சென்று கற்று மீண்டும் தாய்நாட்டிற்கு வருகை தந்து மக்கள் பணியைப் பொதுப்பணியாகக் கொண்டு 32 வருடகாலமாக அரசியல் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். இக்காலப்பகுதியில் சமாதான நீதவானாகவும், 5 வருடங்களாக பிரதேச சபை உறுப்பினராகவும், 4 வருடங்களாக யாழ் மாநகர சபை உறுப்பினராகவும் இருந்து தொடர்ந்து வடமாகாண சபை உறுப்பினராக இன்றுவரை செயற்பட்டு

வரும் என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினர் அவர்கள் எனது தொலைபேசி ஊடான அழைப்பினை ஏற்று எந்தவிதமறுப்பும் இன்றி தன்னுடைய வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் இங்கே பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தங்களைஎமது பாடசாலைச்சமூகம் சார்பில் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். தீவகவலயத்தின் மாணவர்களின் தேவைகளையும், பாடசாலையின் தேவைகளையும் முன்வைக்கும் போதெல்லாம்தன்னால் இயன்ற உதவிகளை உடனுக்குடன் செய்துவரும் தாங்கள் நாம் எமது பாடசாலையின் உடனடித் தேவையான பாண்ட் வாத்தியக் கருவிகளைக் தந்துதவுமாறு கோரிய போது எந்த விதமான மறுப்பும் இன்றி அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தங்களது ஒதுக்கீட்டிலி-ருந்துரூபா 150,000 ஐ தந்து உதவியமைக்காக இந்நேரத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தொடர்ந்து இன்றைய எமது பரிசளிப்பு தின நிகழ்விற்கு எமது அழைப்பை ஏற்று சிறப்புவிருந்தினராக வருகைதந்திருக்கும் எமது அயற் பாடசாலையான புனித அந்தோனியார் கல்லூரியின் முதல்வர் அருட்பணி கருணாதிராஜா ஜேம்ஸ் சிங்கராஜர் அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு எமக்குப்பல வழிகளிலும் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் வழங்கி வருகின்றார். புனித அந்தோனியார் கல்லூரியின் சிறந்த அதிபராக கடமையாற்றும் இவர் தனது ஆரம்பக்கல்வியை வசாவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

இவர் 1981 ல் இறைவனின் அழைப்பை ஏற்று சமயநற்பணிகளை தொடங்குவதற்காக குருத்துவக்கல்வியைப் பயின்று 1992 காலப் பகுதியில் வணக்கத்திற்குரிய ஆயர் பஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவருடைய உயர்கல்வியைப்பற்றி கூறுவதானால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு 1994ல் கலைமாணிப் பட்டத்தையும் 2006 ல் முதுகல்விமாணிப் பட்டத்தையும்

பெற்றுக்கொண்டார். பின்னர் 2014 காலப்பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ சமயத்தில் சிறப்புப்பட்டத்தையும் பெற்று சிறந்த கல்வியியலாளனாக திகழ்ந்து வருகிறார்.

இவருடைய சமயப்பணிகளின் வரிசையில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, இளவாலை, மானிப்பாய் பகுதிகளில் உதவிப் பங்குத்தந்தையாக இருந்து மக்களுக்கு அரும்பணியாற்றினார். இவருடைய கல்விப்பணிகளின் தொடக்கமாக 1993ம் ஆண்டு இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியில் ஆசிரியராகப்பணியாற்றி குறுகிய காலத்திலேயே அப்பாடசாலையின் உதவி அதிபராகவும் பின்னர் அதிபராகவும் கடைமையேற்று தொடரந்து ஆறு வருடங்கள் அங்கு கல்விப்பணியாற்றி தற்போது ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் சிறந்த முதல்வராக விளங்கி வருகிறார்.

அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராஜா் அவா்கள் எமது பாடசாலையின் வளா்ச்சியில் மிகுந்த அக்கறைகொண்டு எமது பாடசாலைப் பிள்ளைகளை தனது பாடசாலைப் பிள்ளைகள் போல் நேசித்து உதவி வருகின்றார். என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அண்மையில் தனது பாடசாலைப்பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டபோது அவற்றை எமது பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அவ்வசதியைப் பெற்றுத்தந்து எமது மாணவா் களின் வளா்ச்சிக்காகவும் பங்களிக்கின்ற சிறந்த ஆளுமை கொண்ட நற்பண்புமிக்கவா். தனது குருத்துவப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற இவ்வேளையிலே இறை வழிநடத்தல்கள் தொடர்ந்தும் இவரது குருத்துவப்பணிகள் தொடரவும் எமது பாடசாலைச்சமூகத்தின் பெயரால் 25 ஆண்டுகள் குருத்துவ சேவையில் யூபிலி வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஊா்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளா் திரு.மு.சத்தியசீலன் அவா்கள் இன்றைய எமது பெருவிழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருப்பது எமக்கு மகிழ்வையும் ஊக்கத்தையும் தருகின்றது. ஊா்காவற்றுறைக் கல்விக்கோட்டப்பாடசாலைகளின்

கல்வி வளர்ச்சியில் மிகுந்த கரிசனை கொண்டு தகமை சார்ந்த, அனுபவம் சார்ந்த தன்னுடைய வழிகாட்டலினால் ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தை சிறப்பான முறையில் வழிநடத்தி வருகின்றார். குறிப்பாக எமது பாடசாலையின் வளர்ச்சியில் அதீத அக்கறையோடு செயற்பட்டு வருவதோடு தேவையான போதெல்லாம் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி எமது பாடசாலையின் துரிதவளர்ச்சிக்காக பாடுபடுபவர்களில் முதன்மைநிலை பெறுகின்ற ஒருவராக நாம் அவரை இனங்காண்கின்றோம். அவருடைய காலத்திலேயும் எமது பாடசாலை தொடர்ந்தும் சிறந்தவொரு பாடசாலையாக இயங்கிக் கொண்டிருப்பதையிட்டு பெருமை கொள்வதோடு அவர் பணிசிறக்க இறைவனைப்பிரார்த்திப்பதுடன் அவரை அன்புடன் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அத்துடன் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் எங்கள் ஊர்காவற்றுறைப் பிரதேச பங்குத்தந்தையான அருட்திரு பாக்கியநாதன் பிரான்சிஸ் இராஜசிங்கம் அடிகளார் எம்மோடு அருகிலிருந்து எங்கள் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் உன்னிப்பாக அக்கறையோடு அவதானித்து வருவது மட்டுமல்லாமல் எமக்கு ஆலோசனைகளை வழங்கி வருவதோடு எம்மோடு ஒன்றித்து எமக்கு ஆசிகள் வழங்கி வருவதையிட்டு பெருமையடைகின்றேன். அந்தவகையில் இன்னும் எமது விழாவிற்கு ஆசியுரை வழங்கி சிறப்பிக்கவந்திருக்கும் தங்களையும் இன்முகத்தோடு வரவேற்கின்றேன்.

மேலும் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவி திருமதி மனோகரன் மேரி சைலா அவர்கள் அவருடைய ஆரம்ப பள்ளிக்காலம் தொடக்கம் சிறந்த மாணவியாக விளங்கி வந்தார்.தற்போதுஅவர் 25 வருட வாழ்க்கையினை சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்றபோதும் எமது பாடசாலையின் முன்னேற்றத்தில் பங்கெடுத்து உதவிசெய்து வருகின்றார். மேலும் மாணவர்களின் கல்வி அடைவை உயர்த்துவதற்கு பாடசாலைக்கு இவருடைய பங்களிப்பானது மிகவும் உன்னதமாக அமைகின்றது. அந்த வகையில் எமது குறுகியகால அழைப்பினை ஏற்று இவ்வழாவிற்கு கௌரவவிருந்தினராக

வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அதேவேளை எமது பாடசாலை அபிவிருத்திக்காகரூபா 50,000 ஐ அன்பளிப்புச் செய்துள்ளார். இத் தருணத்தில நான் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதோடு அவரை இன்முகத்தோடு வரவேற்று நிற்கின்றேன்.

## மாணவர் விபரம்

2016ம் ஆண்டில் இவ்வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவில் 57 மாணவிகளும், இடைநிலைப் பிரிவில் 144 மாணவிகளும் உள்ளடங்களாக 201 மாணவிகளைக் கொண்டு ஒரு மகளிர் பாடசாலையாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. நீண்டகாலப் போரின் பின் இப்பிரதேச மக்கள் கல்விகற்கும் பாடசாலையாக உள்ளபோதும் இடம்பெயர்ந்து சென்ற அநேகமானோர் மீள்குடியேற்றத்தில் ஈடுபடாமையும், மகளிர்மட்டும் கற்கும் பாடசாலையாக காணப்படுகின்றமையாலும், க. பொ. உயர்தரத்திற்கு மாணவிகள் வேறு பாடசாலைகளுக்கு செல்ல வேண்டியிருப்பதனாலும் எமது மாணவர் எண்ணிக்கை 200களுடன் மட்டுப்படுத்தப்படுவதற்கு காரணமாக அமைகிறது.

## ஆசிரியர் ஆளணி

2016 ல் எமது வித்தியாலயத்தில் 15 நிரந்தர ஆசிரியர்களும் 02 பகுதிநேர ஆசிரியர்களும், 03 தொண்டராசிரியர்களும் முழுநேரம் விடுவிக்கப்பட்ட 01 ஆசிரியரும் என மொத்தமாக 21 ஆசிரியர்கள் சேவையாற்றி வந்தனர். இவர்களில் 04 பட்டதாரி ஆசிரியர்களும், 02 நுண்கலைப்பட்டதாரி ஆசிரியர்களும், 02 பட்டப்பின் டிப்ளோமாதாரிளும், 02 கல்வி டிப்ளோமாதாரிகளும், 07 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் 01 ஆசிரியர் பயிற்சி டிப்ளோமாதாரியும் அடங்குவர்.

இவர்களுடன் 2016ல் புதிதாக எம்முடன் இணைந்த ஆசிரியர்களான செல்வி ச.கோபிகா,செல்வி.ஞா.நிருஜானி, செல்வி.மு.விஜயந்தி, திருமதி.கு.அருந்தஜா, திரு.ஞா.வேல்ரூபன் இவர்களை எமது

பாடசாலைச்சமூகம் வரவேற்பதுடன் இவர்களது பணிசிறக்க வாழ்த்துகின்றேன்.

மேலும் எமது பாடசாலையிலிருந்து திருமதி புனிதமலர் கணேசநாதன், திருமதி பாலரூபினி ஜனார்த்தனன், திரு. யதீஸ் கணேசலிங்கம், திருமதி யோகினி கயலவன் ஆகியோர் இடமாற்றலாகிச் சென்றுள்ளனர். திருமதி புனிதமலர் கணேசநாதன் 07 ஆண்டுகளாக ஆரம்பக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். கடந்த வருடம் தனது அயராத முயற்சியால் 02 மாணவர்களைப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையச்செய்து எமது பாடசாலைக்குப் பெருமைசேர்த்து தற்போது கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலயத்தில் கடமையாற்றுகின்றார். திருமதி பாலரூபினி ஜனார்த்தனன் அவர்கள் இப்பாடசாலையில் 03 ஆண்டுகள் ஆரம்பக்கல்வி ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். இவர் பாடசாலையில் கடமையாற்றிய காலங்களில் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு வர்த்தக பாடத்தையும் கற்பித்ததுடன் பாடசாலைக்கு சிறந்த பணியாற்றினார். ஆவர் தற்போது திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் கடமையாற்றுகின்றார். திருமதி யோகினி கயலவன் அவர்கள் நடன ஆசிரியராக இப் பாடசாலையில் கடமையாற்றி தற்போது யா/ காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் கடமையாற்றுகின்றார்.

திரு யதீஸ் கணேசலிங்கம் எமது பாடசாலையில் பகுதிநேர ஆசிரியராக இருந்தபோதும் எமது பாடசாலையில் பல்வேறு செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பை ஆற்றியதுடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் 100% சித்தி பெறவைத்த பெருமை இவருக்குரியது. இவர் தற்போதுயா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் கடமையாற்றுகின்றார். இடமாற்றலாகிச் சென்ற இவர்களின் பணி சிறக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

**கல்விசாரா ஊழியர்கள்**

2016ம் ஆண்டில் பாடசாலை அலுவலகப்பணியாளராக திரு அன்ரன் மொறிஸ் அவர்கள் கடமையாற்றி வருவதுடன் பாடசாலையின் சகல

கல்விசாரா செயற்பாடுகளிலும் எமக்குப் பக்கபலமாக இருந்து செயலாற்றி வருவதையிட்டு நன்றியுடன் பாராட்டி நிற்கின்றேன்.

சமையல் உதவியாளராக 2013ல் நியமிக்கப்பட்ட திருமதி குருதர்சினி பிரேமதாசா 2014ம் ஆண்டு ஆவணி மாதம் முதல் காரைநகர் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளார். இதனால் மாணவர்களுக்கான மதிய உணவு தயாரிப்பில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றோம்.

**கல்வி அபிவிருத்தி**

எமது பாடசாலையில் முன்னெடுக்கப்படும் ஆசிரியர், மாணவர் உயர்மட்ட செயற்றிட்டங்கள், காலை, மாலை மேலதிக வகுப்புக்கள், வினைத்திறன் மிக்க உள்ளக மேற்பார்வை, ஆசிரியர்களின் அர்ப்பணிப்போடு கூடிய கற்பித்தல், காலத்திற்குக்காலம் வலயக்கல்வி அலுவலகத்தின் வெளியக மதிப்பீடுகள், வழிகாட்டல் ஆலோசனைகள் மூலமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

2016 ல் தரம் 05 புலமைப் பரிசில், மற்றும் க.பொ.த சாதாரணதரப பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக உள்ளன. 2016 ஆவணியில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 02 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்ததோடு 10 மாணவிகள் 100 புள்ளிக்கு மேல் பெற்றும், 03 மாணவிகள் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றும் 95%மான சித்தியைப் பெற்றுள்ளனர்.

2016 மார்கழியில் இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் செல்வி ச.சசிகலா எனும் மாணவி 7A, C எனும் மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்று எமது வித்தியாலயத்திற்கும், ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்திற்கும் தீவகக் கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். எமது வித்தியாலயத்தின் க.பொ. த சாதாரண தர பெறுபேற்றின் விகிதாசாரங்கள் முறையே.

| | |
|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 96% |
| கணிதம் | 62% |
| விஞ்ஞானம் | 57% |
| வரலாறு | 81% |
| ஆங்கிலம் | 10% |
| குடியுரிமை | 81% |
| புவியியல் | 100% |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 100% |
| மனைப் பொருளியல் | 100% |
| நடனம் | 100% |
| சங்கீதம் | 100% |
| சித்திரம் | 100% |
| இந்துசமயம் | 100% |
| கத்தோலிக்கத் திருமறை | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 85% |

இதன் பிரகாரம் க.பொ.த சாதாரண தரத்திற்குத் தோற்றிய 21 பேரில் 71% மானோரா் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## நூல் நிலையம்

மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவது நூல் நிலையமாகும். ஆனால் எமது பாடசாலையில் பௌதீக வளப்பற்றாக்குறையினால் தனியாக நூல் நிலையத்திற்கு இடம் ஒதுக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. எனினும் மாணவர்களின் அறிவு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பழைய கட்டிடத்தொகுதியில் ஓரிரு அலுமாரிகளை மட்டும் கொண்டு மாணவர்களின் நூலகத் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்ய

முயற்சிப்பதோடு மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு காலை ஒன்றுகூடலில் தினசரிபத்திரிகை வாசிப்புச் செயற்பாடு நடைபெறுகின்றது.

## கணினி நிலையம்

இன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி காரணமாக மாணவர்களின் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளது. தரம் 1-11 வரையான 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கணினி அறையைப் பாவித்த போதும் ஆய்வுகூட வசதியாக அன்றி சிறு அறையாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வறை கடந்த ஆண்டில் புனரமைக்கப்பட்டதுடன் ரபான் நிறுவனத்தினால் 5 கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை எமது தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்யக் கூடியதாக அமைந்தது.

## பாடசாலை அபிவிருத்திக் குழு

பெற்றோர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது. எமது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குப் பல உதவிகளைப் புரிந்து வரும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் திருமதி. செல்வரஞ்சினி இளமாறன் அவர்களுக்கும், பொருளாளர் திரு.ப.காண்டீபன் அவர்களுக்கும், மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் இவ் வேளையில் எனது மனமார்ந்த நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# மன்றங்கள்

## ➢ தமிழ் இலக்கிய மன்றம்

மாணவர்களிடையே மொழியறிவை விருத்தி செய்யும் பொருட்டு வகுப்பு ரீதியான தமிழ் இலக்கிய மன்றமானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மன்றத்தின் மூலம் மாணவர்களிடையே இருக்கின்ற பல்வேறுபட்ட ஆற்றல்கள், கவிதை, பேச்சு, நாடகம், விவாதத் திறன்கள் போன்றன வெளிக்கொணரப்படுகின்றன. அத்துடன் மாணவர்கள் தமிழ்மொழித் தினப் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ➢ கத்தோலிக்க மன்றம்

கத்தோலிக்க மன்றமானது எமது மாணவர்களின் ஆன்மீக ரீதியான ஒழுக்க விழுமியங்களை வளர்க்கும் நோக்கோடு சிறப்பாக இயங்கி வருகிறது. காலைப் பிரார்த்தனை, முதல் வெள்ளித்திருப்பலி, ஆலய விழாக்கள், மறைக்கல்வி போன்றவற்றில் மாணவர்களை சிறப்பான முறையில் ஈடுபடச்செய்கிறது. மேலும் தவக்காலத்தில் வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாத தியானங்களை வகுப்பு ரீதியில் மாணவர்கள் முன்னெடுக்கும் அதேவேளை இக்காலத்தில் ஒப்புரவு அருட்சாதனமும் ஒழுங்குபடுத்தி சிறப்பாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மாதம் தோறும் குறிப்பிட்ட தினங்களில் மன்றச்செயற்பாடுகள் நடைபெறுகின்றது. ஒளிவிழா சிறந்த முறையில் நடைபெறுகிறது. மேலும் கிறிஸ்தவ மாணவர்களின் மறையறிவை வளர்க்கும் பொருட்டு மறைக்கல்விப் போட்டிகளில் பங்குபற்றி சிறந்த பெறுபேற்றை பெற்று வருகின்றனர்.

## ➢ இந்து மன்றம்

இந்து மன்றமானது எமது இளம் இந்து சிறார்களுக்கு அவர்கள் வளரும் மாணவப் பருவத்திலேயே உயர்வான வாழ்வின் மதிப்பீடுகளை நன்கு கிரகித்துக்கொள்ளவும் ஒழுக்கம் தரும் பழக்கங்களை வளர்த்துக்கொள்ளவும் மனதிலும் உணர்ச்சிகளிலும் அறிவிலும் நீதிநெறி வழியிலும் ஆன்மீகத்திலும் மலர்ந்து விரிந்து மாணவர்களின் ஆளுமைத்தன்மையை வளர்க்கவும் அவர்களது

இதயங்களில் தெய்வீகத் தாமரையை மலரச்செய்வதற்கும் பாடசாலையின் இந்துசமயச் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. காலைப்பிரார்த்தனை வெள்ளிக்கிழமைகளில் விசேடமாக இடம்பெறுகின்றது. சைவபரிபாலன சபைப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி திறமைச்சித்திகளைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இம்மன்றச் செயற்பாடுகள் மூலம் கலைத்திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

## ➢ சமூகவிஞ்ஞான மன்றம்

சமூகவிஞ்ஞான மன்றமானது மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளினை உயர்த்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது. கற்றல் நடவடிக்கைகளுக்கு அப்பால் மாணவர்களது சமூகம் சார் பொது அறிவுத்தன்மைகளை வளர்ப்பதாகவும்,சர்வதேச தினங்களான சூழல்தினம், புவிதினம், மகளிர்தினம் போன்றவற்றை நினைவு கூறும் நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இம் மன்றமானது மாதம்மொரு தடவை கூடிச்செயற்படுவதுடன் சமூகவிஞ்ஞானப் போட்டிக்குத் தயார்படுத்தும் முகமாக வினாடிவினாப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

## ➢ கணித விஞ்ஞான மன்றம்

மாணவர்களிடையே கணித விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் முகமாகவும் அவர்களின் ஆளுமைத்திறனை விருத்தி செய்யும் முகமாவும்இம்மன்றம் செயற்பட்டு வருகின்றது. இம்மன்றச் செயற்பாடுகளின் மூலம் மாணவர்களின் ஆக்கங்கள், திறமைகள் என்பன வெளிக்கொணரப்படுவதோடு கணித மற்றும் விஞ்ஞான வினாடிவினாப் போட்டிகள் நடைபெற்று பரிசில்கள் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## ➢ ஆங்கில மன்றம்

எமது வித்தியாலயத்தில் செயற்படும் ஆங்கிலமன்றத்தின் மூலம் மாணவர்களின் ஆங்கிலமொழி விருத்தியை அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் மன்றக் கூட்டத்தினை நடாத்தி வருகின்றோம்.

இவ்மன்றக் கூட்டத்தில் மாணவர்களின் ஆங்கில மொழி மூலமான செயற்பாடுகள் வெளிக்கொணரப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஆங்கில மொழி மூலமான காலை ஒன்றுகூடல் இடம்பெற்று வருகின்றது. எமது வருடாந்த ஆங்கிலதின நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. என்பதுடன் மாணவர்கள் ஆங்கிலதினப் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்று வருவதுடன் கோட்டமட்ட, வலயமட்ட போட்டிகளில் கணிசமான பெறுபேறுகளைப்பெற்று மாகாண மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றனர்

## ➢ ஆரம்பக் கல்வி மன்றம்

மாணவர்களின் தலைமைத்துவத்திறனை வளர்த்து எதிர்காலத்தில் சிறந்த ஆளுமை மிக்கவர்களாகவும் சுயஆக்கத்தினை வெளிக் கொணர்வதற்கும் ஆரம்பக்கல்வியிலே அத்திவாரம் மிடப்பட்டு வளர்க்கப்படும் செயற்றிறனாக அமையும் விதமாக எமது ஆரம்பக் கல்வி மன்றம் அமைந்துள்ளது. மேலும் ஒவ்வொரு மாணவர்களும் சபை முன்னே பயமின்றியும் தயக்கமின்றியும் தமது ஆற்றல்களையும் படைப்புகளையும் வெளிக்கொணர்ந்து பொருத்தமான உறவுகளையும் தொடர்பாடல் திறன்களையும் பேச்சுத் திறன்களையும் ஒற்றுமையாகச் செயற்படும் பண்பினையும் வளர்த்துக்கொள்ள இம்மன்றமானது பெரிதும் உதவுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ➢ நுண்கலை மன்றம்

எமது மாணவர்களின் கலைத்திறன்களை வளர்த்தெடுக்க நுண்-கலை மன்றம் பெரிதும் உதவுகின்றது. சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களைப் பயிலும் மாணவர்கள் தமது கலையாற்றல்களை வளர்க்கும் இடமாக நுண்கலை மன்றம் வியங்குகின்றது. எமது மாணவர்கள் பாடசாலை நிகழ்வுகளுடன் மட்டுமல்லாது ஏனைய நிகழ்வுகளிலும் தமது நடன நிகழ்வுகளை வழங்கி வருகின்றனர். சங்கீத மாணவர்கள் பல்வேறு நிகழ்வுகளிலும் தமது பாடல்களை வழங்கி வருகின்றனர். சித்திரபாட மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றுள்ளனர். அம் மாணவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## ➢ மாணவர் பாராளுமன்றம்

மாணவர்களுக்கு சனநாயக அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றின் பிரயோகம் தொடர்பான விரிவான விளக்கத்தைப்பெறும் வகையில் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்ட மாணவர் பாராளுமன்றம் 2016 ஐப்பசி மாதம் 3ம் திகதி எமது பாடசாலையிலும் தேர்தல் நடாத்தப்பட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு 26.11.2016 இல் முதலாவது அமர்வு நடைபெற்றது. இப்பாராளுமன்ற அமைப்பில் சபாநாயகர், பிரதமர், சபை முதல்வர், பிரதிச்சபாநாயகர், பிரதிச் செயற்குழுத் தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ஆலோசனை செயற்குழுக்கள் உள்ளடங்குவர்.

இம் மாணவர் பாராளுமன்ற அமர்வுகளின் போது 10 அமைச்சர்களாலும் முன்வைக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கு ஆலோசனைகளும் உதவி ஒத்தாசைகளையும் புரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கும் பொறுப்பாசிரியர் திருமதி.கவிதா கணேசன் அவர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் இம்மாணவர் பாராளுமன்றச் செயற்பாடுகள் துரித வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வாழ்த்துகின்றேன்.

## ➢ சுற்றாடல் முன்னோடிக் குழு

மத்திய சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் எமது சுற்றாடல் முன்னோடிக்குழுவானது பச்சைப்பதக்கத்தைப் பெற்று தற்போது 25 மாணவர்கள் பச்சைப்பதக்கம் பெறும் தகுதியில் உள்ளனர். இச்சுற்றாடல் முன்னோடிக் குழு மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான செயற்பாடுகள் நடைமறைப்படுத்தப்பட்டு வருவதுடன் உலக சுற்றாடல் தினமும் வருடாந்தம் கொண்டாடப்படுகின்றது. இவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களான திருமதி ச.விக்னராசா மற்றும் செல்வி.ச.அனுஷா அவர்களுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றோன்.

## ➢ பாண்ட் வாத்தியக்குழு

எமது பாடசாலையில் பாண்ட் அணியினர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலை விழாக்கள் மற்றும் சமூகப்பொது நிகழ்வு-களில் எமது அணியினர் கலந்து சிறப்பிப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வணியினரை சிறப்பாக பயிற்றுவிக்கும் செல்வி.ச.அனுஷா சந்திரதாஸிற்கும் அம்மாணவர்களிற்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோன்.

## ➢ விளையாட்டு

வருடந்தோறும் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்-போட்டிசிறப்பாக நடைபெற்று வருகின்றது. எமது பாடசாலைக்கு சொந்தமாக விளையாட்டுமைதானம் இல்லாத போதும் பாடசாலைக்கு முன்பாக உள்ள சிறு திடலில் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாணவிகள் மைதான விளையாட்டுக்களிலும், கரப்பந்து, வலைப்பந்து போன்ற பெரு விளையாட்டுக்களில் பங்கு பற்றுவதோடு கோட்டமட்டம்,வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப்பெற்று வருவதுடன் மாகாணமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றிவருவது பாராட்டுக்குரியது.

## ➢ மதிய உணவு

பாடசாலை மாணவர்களின் உடல், உள விருத்திக்கு ஆரோக்கி-யமும் போசாக்கும் இன்றியமையாதன. அந்த வகையில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் தரம் 1-9 வரையான மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் தொடர்ந்தும் சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. ஜோசப் மனுவேலுப்பிள்ளை அவர்களின் தலைமைத்து-வத்தில் இயங்கி வருகின்ற ஒருபானைத்திட்டத்தின் மூலமும் எமக்கு நிதி உதவி கிடைத்து வருகின்றது. மதிய உணவுக்குப் பங்களிப்புச் செய்யும் இவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் இத் திட்டத்தினை சரிவர நடைமுறைப்படுத்தி வரும் ஆசிரியர் செல்வி.பிறேமலா அருள்நேசதாசன் அவர்கட்கும் மதிய உணவை தயார்செய்து வழங்க உதவி செய்யும் திருமதி.சிறிஸ்கார்மெலா அவர்கட்கும் இத்தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

## ➢ பரிசளிப்பு விழா

2015ம் ஆண்டின் பரிசளிப்பு விழா 02-07-2016 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண மீன்பிடித்துறை அமைச்சின் இணைக்கச் செயலாளர் உயர்திரு. சிவலிங்கம் சத்தியசீலன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை அருட்பணி பிரான்சிஸ் இராஜசிங்கம் அவர்களும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.முருகேசு சத்தியசீலன் அவர்களும், கௌரவ விருந்தினராக எமது பழைய மாணவியான திருமதி.அனிலாசதானந்தசிவம் அவர்களும் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக்கௌரவித்தனர்.

## ➢ பழைய மாணவர் சங்கம்

ஒரு பாடசாலையின் உயிர்நாடி என்று கூறப்படுவது அது பழைய மாணவர் சங்கமே. எமது பாடசாலையைப் பொறுத்த மட்டில் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு எமது பாடசாலையில் க.பொ.தஉயர்தரவகுப்புகள் இல்லாமல் இருப்பதும் காரணமாகஇருக்கலாம். ஆனாலும் கனடா வாழ் பழைய மாணவியாகிய திருமதி.மெரிற்றா ராம் மற்றும் நோர்வே வாழ் திருமதி.வெறோணா ஆகியோர் தம்மால் இயன்ற பங்களிப்பை இடையிடையே ஆற்றி வருகின்றனர்.

## ➢ எமது தேவைகள்

பற்றாக்குறையான பௌதீக வளங்களையும், ஆசிரிய ஆளணியி-னரையும் கொண்டு மாணவர்களின் கல்வியின் அடைவு மட்டத்தை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் உயர்த்திக் கொண்டிருக்கும் அதேவேளை வளர்ந்து வரும் நவீன சமுதாயத்தின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலும் வலிமையுமுடைய ஆளுமை மிக்க புதிய சமுதாயத்தை கட்டியெழுப்பக்கூடியதும் தொழில் உலகிற்கு பொருத்தமான எதிர்கால சந்ததியை உருவாக்கும் பொறுப்பும் எம் கரங்களில் தரப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் எமது பௌதீக வளத்தேவையானது எமது பொறுப்பையும், குறிக்கோள்களையும் முன்னெடுத்துச் செல்ல முடியாத இக்கட்டான நிலைக்குள் எம்மையும் மாணவ சமூகத்தையும் முடக்கியுள்ளதாக உணருகின்றோம்.

இவை அனைத்திற்கும் காரணமாக அமைவது எமது பௌதீக வளப்பற்றாக்குறையே எனலாம். ஆரம்பக் கல்வியை எடுத்துக் கொண்டால் மூடிய வகுப்பறையின்மையும், காட்சிப்படுத்தி கற்பிக்கக் கூடிய சூழலின்மையும், விளையாட்டின் மூலம் மகிழ்ச்சியாகவும், மனதில் நீடித்து நிலைக்கக் கூடியதான கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்கு சிறார்களுக்கான விளையாட்டு முற்றம் இன்மை-யாலும் எமது ஆரம்பப்பிரிவு மாணவர்களை சிறு வகுப்பறைக்குள் முடக்கி புத்தகப்பூச்சியாக தமது பிள்ளைப் பருவத்தை கழிக்க வேண்டிய நிலையில் இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வேலை உலகிற்கு மாணவர்களை தயார் செய்யும் வகையில் பாடங்கள் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதிக்கு அமைய மாணவர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு குறிப்பாக கணித விஞ்ஞான ஆய்வு கூட வசதியின்மை, செய்முறை, தொழில்நுட்பத்-திற்கான பொருத்தமான வகுப்பறையின்மை, நடனம், மனைப் பொருளியல், சித்திரம், வணிகம் போன்ற பாடங்களுக்கான வகுப்பறைகள் இன்மை, மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு போட்டிகளில் கலந்து கொள்ள ஏதுவான விளையாட்டு மைதானமின்மை, போன்றன பெரும் குறைபாடாக உள்ளன.

எமது இந்தப் பற்றாக்குறைகளை அன்பான பெற்றோர்களே, பழைய மாணவர்களே, கிராமமக்களே இச்சந்தர்ப்பத்தில் உங்கள் முன் வைக்கின்றேன். நான் மேற் கூறிய பெரும்பாலான தேவைகளை நிறைவேற்றக் கூடிய ஒரே வழி எமது பாடசாலை வளாகத்தில் உள்ள 146 வருடங்கள் பழமை வாய்ந்த 100x40 அடி சுண்ணாம்புக்

கட்டிடத்தை அகற்றி அவ்விடத்தில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை அமைப்பதன் மூலம் பல பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். ஏனெனில் எதிர் காலத்தில் வேறு புதிய கட்டிடங்களை அமைப்பதற்குரிய காணி இடவசதி எம்மிடம் இல்லை.

எனவே இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய வடமாகாண சபை உறுப்பினர் திருவாளர் விந்தன் கனகரட்ணம் அவர்களே எமது இவ் முக்கியமான கோரிக்கைக்கு தங்களால் ஆன முயற்சிகளை எடுப்பீர்கள் என நம்புகிறேன்.

அத்துடன் எமது பாடசாலையின் உடனடித்தேவைகளாக ஆரம்பக்கல்வி வகுப்பறைகள் மண்டபத்தில் நடைபெறுவதனால் அதனை வகுப்பறைகளாக கொங்கிறீற் சுவர்கள் மூலம் பிரித்தடைக்க வேண்டியுள்ளதுடன் கட்டடத்தின்கூரையும் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன் விஞ்ஞான ஆய்வுகூடமும் நவீனமயப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் தற்போது அஸ்பெற்ரஸ் கூரைத் தகடுகளினால் அமைக்கப்பட்டுள்ள கூரையும் ஓடுகளினால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. பாடசாலையில் பயன்படுத்தப்படுகின்ற நிழற் படப்பிரதி எடுக்கும் இயந்திரம் காலம்கடந்து பலமுறை திருத்த வேலைகளுக்குட்பட்டு தொடர்ந்தும் வினைத்திறனாக இயங்க முடியாதுள்ளது. எனவே மேறகுறித்த எமது பாடசாலையின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அவற்றை நிறைவு செய்வற்கு தங்களாளான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு எமது பிரதமவிருந்தினர் அவர்களை கேட்டு நிற்கின்றேன்.

## ➢ நன்றிகள்

எமது வித்தியாலயத்தின் சகல வளர்ச்சியிலும் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து வருகின்ற எமது வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.சுந்தரசிவம் அவர்களுக்கும், எமது மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும், இணைப்பாடவிதானச்செயற்பாடுகளின் விருத்திக்கும் பல வழிகளில் உதவி ஆலோசனை வழங்கி வருகின்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஆகிய அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

- பாடசாலையின் வளர்ச்சிக்கு எப்போதும் பக்கபலமாக நின்று ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதுடன் மாணவரின் ஆன்மீகத்திலும், கல்வி வளர்ச்சியலும் தம்மை அர்ப்பணித்து உழைத்து வருபவருமாகிய எமது பங்குத்தந்தை அருட்பணி இராஜசிங்கம் அடிகளாருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

- நோர்வேயில் வாழும் பழைய மாணவியான திருமதி வரோணா தொடர்ந்து எமது பாடசாலைக்குப் பல வழிகளில் பங்களிப்புச் செய்து வருகின்றார். பரிசளிப்பு விழாவிற்காக ரூபா 50, 000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார். இவருக்கு எம் நன்றிகளும் பாராட்டுகளும்.

- எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் தேவை கருதி சுவிஸ் நாட்டில் வசிக்கும் எமது பழைய மாணவியான திருமதி தெய்வேந்திரம் அவர்களால் அவர்களுடைய மகள் தெ.நர்மதா அவர்களின் ஞாபகார்த்தமாக ரூபா.70,000 பெறுமதியான சுழல் ராட்டினம் அன்பளிப்புச் செய்துள்ளார். இத் தருணத்தில் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கோடு கனடா வாழ் பழைய மாணவியாகிய திருமதி மெரிற்றா ராம் தரம் 09, 10 மாணவர்களுக்கான கணித, ஆங்கில வகுப்புகளை நடாத்த உதவி செய்கின்றார். இவருக்கும் எமது நன்றிகள்.

- எமது பாடசாலையின் பெற்றோர் பாடசாலையில் நடைபெறுகின்ற எல்லா நிகழ்விற்கும் தம்மால் இயன்ற நிதி உதவிகளையும், மற்றும் சிரமதானப் பணிகளின் மூலம் பாடசாலைச் சுற்றாடலைத் துப்பரவு செய்யும் பணியிலும், நான் கேட்கின்ற போதெல்லாம் என் பணிக்கு பக்கபலமாக நின்று என் சுமையை இலகுபடுத்தும் என் அன்பார்ந்த பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுகளும்.

இவ் விழாவினை சிறப்பிக்க எம் அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடமாகாண சபை உறுப்பினர் திரு விந்தன் கனகரட்ணம் அவர்கட்கும், சிறப்பு விருந்தினராக வந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாருக்கும், கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் அருட்பணி பிரான்சிஸ் இராஜசிங்கம் அடிகளாருக்கும் மற்றும் ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருவாளர் சத்தியசீலன் அவர்களிற்கும் விடுமுறைக் காலத்தை தன்னுடைய சொந்த மண்ணில் சொந்த உறவுகளோடு களிக்க வந்திருக்கும் பழைய மாணவி திருமதி மனோகரன் மேரிசைலா இவ் விழாவிற்கு கௌரவ விருந்தினராக வருகை தர அழைப்பு விடுத்த வேளையில் எவ்வித மறுப்பும் இன்றி கலந்து கொண்டு சிறப்பித்தமைக்காகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் விழாவை சிறப்பிக்க எம் அழைப்பினை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றிகளைத் தெருவித்துக் கொள்வ-தோடு, எப்போதும் தோளோடு தோள் நின்று உழைக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், எனது பணிகளைப் பகிர்ந்து பொறுப்புடன் பங்களிப்புச் செய்யும் உதவி அதிபர் செல்வி யோ. அஞ்சலா மேர்சி, மற்றும் முகாமைத்துவ அணியினருக்கும், என் அன்பான ஆசிரிய குழாமினருக்கும், பல வழிகளில் உதவிக்கரம் நீட்டும் என் பெற்றோருக்கும், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது சிறப்பான நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதோடு பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றிகளைக் கூறி இவ் அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

**அருட்சகோதரி**

**கிறிஸ்மேரிஸ்ரனிஸ்லாஸ்**

# பரிசில் பெறுவோர் விபரம்

## பாடரீதியாக பரிசு பெறும் மாணவர்கள்

## தரம் - 01

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | அ. மேரி ஜக்குலின் | அ. சஹானா<br>உ. சர்மி | - |
| கணிதம் | அ. மேரி ஜக்குலின் | ஜி. அரின்யா | வ.மதுஷாலினி |
| சுற்றாடல் | அ. மேரி ஜக்குலின் | உ.சர்மி | வ.மதுஷாலினி |
| கத்தோலிக்கம் | அ. மேரி ஜக்குலின் | ஜி. அரின்யா | வ.மதுஷாலினி |
| சைவசமயம் | உ.சர்மி | | |

## தரம் - 02

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | இ.விஷாலுறீனா | இ.கனிஸ்தியா | சி.டிஸ்லெக்சியா |
| கணிதம் | இ.விஷாலுறீனா | இ.கனிஸ்தியா | ற. கம்சாயினி |
| சுற்றாடல் | இ.கனிஸ்தியா | இ.விஷாலுறீனா | ற. கம்சாயினி |
| கத்தோலிக்கம் | இ.கனிஸ்தியா | ஜெ. ஜீன்ஜெனிபா | இ.விஷாலுறீனா |
| சைவசமயம் | ஞ. சயானா | ற. கம்சாயினி | - |
| ஆங்கிலம் | இ.கனிஸ்தியா | இ.விஷாலுறீனா | ஜெ. ஜீன்ஜெனிபா |

## தரம் - 03

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | ற. பரணிகா | ஸ். ஸ்ரிபிகா | இ. லிந்துஜா |
| கணிதம் | ற. பரணிகா | ஸ். ஸ்ரிபிகா | தே. டிபின்சி |
| சுற்றாடல் | ற. பரணிகா | ஸ். ஸ்ரிபிகா | இ. லிந்துஜா |
| சமயம் | ற. பரணிகா | ஸ். ஸ்ரிபிகா | இ. லிந்துஜா |
| ஆங்கிலம் | ற. பரணிகா | ஸ். ஸ்ரிபிகா | இ. லிந்துஜா |

## தரம் - 04

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | அ.டிலானி | வி.மேசிலித்வினா | அ. கிருத்திகா ஆன் |
| கணிதம் | அ.டிலானி | வி.மேசிலித்வினா | அ. கிருத்திகா ஆன் |
| சுற்றாடல் | அ.டிலானி | வி.மேசிலித்வினா | ஜோ. நிதர்சனா |
| சமயம் | அ.டிலானி | வி.மேசிலித்வினா | த. தனுசா |
| ஆங்கிலம் | அ.டிலானி | அ. கிருத்திகா ஆன் | வி.மேசிலித்வினா |

## தரம் - 05

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | தே. கிசாணி | பி. கிபிஷாளினி | தி . யஷ்மிகா |
| கணிதம் | தே. கிசாணி | பி. கிபிஷாளினி | ரா. எப்சிபா |
| சுற்றாடல் | தே. கிசாணி | பி. கிபிஷாளினி | தி . யஷ்மிகா |
| சமயம் | தே. கிசாணி | ஜோ. பிறின்ரா<br>தி . யஷ்மிகா | - |
| ஆங்கிலம் | பி. கிபிஷாளினி | தே. கிசாணி | ரா. எப்சிபா |

## தரம் - 06

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | வ.மதுசியா | சு.யூடிற்பிருந்தா | வா. எப்சிபா |
| கணிதம் | வ.மதுசியா | வா. எப்சிபா | சு.யூடிற்பிருந்தா |
| கத்தோலிக்கம் | சு.யூடிற்பிருந்தா | வா. எப்சிபா | ர. இஷாமெராரி |
| சைவசமயம் | வ.மதுசியா | மோ. சதுர்த்திகா | ப. கஜானா |
| விஞ்ஞானம் | சு.யூடிற்பிருந்தா | மோ. சதுர்த்திகா | வ.மதுசியா |
| வரலாறு | வா. எப்சிபா | வ.மதுசியா | சு.யூடிற்பிருந்தா |
| புவியியல் | வா. எப்சிபா | வ.மதுசியா | சு.யூடிற்பிருந்தா |
| குடியியல் | மோ. சதுர்த்திகா | வ.மதுசியா | சு.யூடிற்பிருந்தா |
| சுகாதாரம் | மோ. சதுர்த்திகா | சு.யூடிற்பிருந்தா<br>வ. மதுசியா | |
| செ.தொழில்நுட்பம் | மோ. சதுர்த்திகா | சு.யூடிற்பிருந்தா | வ.மதுசியா |
| ஆங்கிலம் | வ.மதுசியா | சு.யூடிற்பிருந்தா | மோ. சதுர்த்திகா |
| நடனம் | சு.யூடிற்பிருந்தா | | |
| சங்கீதம் | வா. எப்சிபா | | |
| சித்திரம் | அ. அலைக்சியா | | |

# தரம் -07

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | ஜெ.ஜெறின்எய்சிபா | ச. கர்ணி | வ. துஷாரா |
| கணிதம் | வ. துஷாரா | ஜெ. ஜெறின்எய்சிபா<br>ஞா. அபிநயா | - |
| விஞ்ஞானம் | வ. துஷாரா | யே. வர்சிகா | கோ. நிருஷா |
| வரலாறு | யே. வர்சிகா | ச. கர்ணி | ஞா. அபிநயா |
| புவியியல் | யே. வர்சிகா | ச. கர்ணி | வ. துஷாரா |
| குடியியல் | செ.சர்மிகா | யே. வர்சிகா | ஜெ.ஜெறின்எய்சிபா |
| சுகாதாரம் | யே. வர்சிகா | ச. கர்ணி | ஞா. அபிநயா |
| செ.தொழில்நுட்பம் | ஞா. அபிநயா | யே. வர்சிகா | ச. கர்ணி |
| ஆங்கிலம் | ச. கர்ணி | கோ. நிருஷா | யே. வர்சிகா |
| கத்தோலிக்கம் | யே. வர்சிகா | | |
| சைவசமயம் | ச. கர்ணி | | |
| நடனம் | ஜெ.ஜெறின்எய்சிபா | | |
| சங்கீதம் | யே. வர்சிகா | | |
| சித்திரம் | ஸ். அஸ்வினி | | |

# தரம் - 08

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | ரா. மெராயஸ் | வா.கிருபாயினி | சு.யஸ்மின் |
| கணிதம் | வா.கிருபாயினி | ஸ்ரீ.தயாளினி | த.நாகதுளசிகா |
| கத்தோலிக்கம் | ரா. மெராயஸ் | மு.றொபக்சினி | கி. மேரிகீர்த்திகா |
| சைவசமயம் | த.நாகதுளசிகா | ஸ்ரீ.தயாளினி | ப. மயூரி |
| விஞ்ஞானம் | த.நாகதுளசிகா | ஸ்ரீ.தயாளினி | சு.யஸ்மின் |
| வரலாறு | வா.கிருபாயினி | த.நாகதுளசிகா | ஸ்ரீ.தயாளினி |
| புவியியல் | வா.கிருபாயினி | கி. மேரிகீர்த்திகா | த.நாகதுளசிகா |
| குடியியல் | ப. மயூரி | ரா. மெராயஸ் | வா.கிருபாயினி |
| சுகாதாரம் | ரா. மெராயஸ் | வா.கிருபாயினி | த.நாகதுளசிகா |
| செ.தொழில்நுட்பம் | த.நாகதுளசிகா | ஸ்ரீ.தயாளினி | சு.டிலானி |
| ஆங்கிலம் | வா.கிருபாயினி | த.நாகதுளசிகா | ரா. மெராயஸ் |
| நடனம் | ரா. மெராயஸ் | அ. டிலானி | ச. சிந்துஜா |
| சங்கீதம் | த.நாகதுளசிகா | அ. மரியசுவேந்திரா | கி. மேரிகீர்த்திகா |
| சித்திரம் | ப. மயூரி | சு.யஸ்மின் | ஸ்ரீ.தயாளினி |
| சிங்களம் | ஸ்ரீ.தயாளினி | ரா. மெராயஸ் | அ. மரியசுவேந்திரா |

# தரம் - 09

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | யூ. மேரிடயானி | கி. மேரியெசில்டா | இ. பவதாரணி |
| கணிதம் | யூ. மேரிடயானி | இ. பவதாரணி | ந. துலக்சி |
| கத்தோலிக்கம் | அ. ஜெனிமரியா | யூ. மேரிடயானி | அ. தாரணி |
| சைவசமயம் | இ. பவதாரணி | உ. தனுஜா | றூா. பூவழகி |
| விஞ்ஞானம் | யூ. மேரிடயானி | அ. ஜெனிமரியா | கி. மேரியெசில்டா |
| வரலாறு | கி. மேரியெசில்டா | இ. பவதாரணி | அ. ஜெனிமரியா |
| புவியியல் | இ. பவதாரணி | - | யூ. மேரிடயானி |
| | ந. துலக்சி | | |
| குடியியல் | இ. பவதாரணி<br>கி. மேரியெசில்டா | - | அ. ஜெனிமரியா |
| செ.தொழில்நுட்பம் | இ. பவதாரணி | அ. ஜெனிமரியா | கி. மேரியெசில்டா |
| ஆங்கிலம் | யூ. மேரிடயானி | இ. பவதாரணி | றூா. பூவழகி |
| சுகாதாரம் | அ. ஜெனிமரியா | | |
| நடனம் | இ. பவதாரணி | | |
| சங்கீதம் | அ. ஜெனிமரியா | | |
| சித்திரம் | ந. துலக்சி | | |
| சிங்களம் | ந. துலக்சி | அ. ஜெனிமரியா | தே. அஜிதா |

# தரம் - 10

| பாடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| தமிழ் | ஜோ. ஸ்ரெலா | ச.சஞ்சிகா | சு. தபோதினி |
| கணிதம் | ஜோ. ஸ்ரெலா | ஜோ. தேனுகா | ச.சஞ்சிகா |
| கத்தோலிக்கம் | ச.சஞ்சிகா | தே.நிஷானி | ஜோ. ஸ்ரெலா |
| சைவசமயம் | தி. வனஜா | சு. தபோதினி | க. கயல்விழி |
| விஞ்ஞானம் | ஜோ. ஸ்ரெலா | ஜோ. தேனுகா | ச.சஞ்சிகா |
| வரலாறு | ச.சஞ்சிகா | ஜோ. ஸ்ரெலா | தே. நிஷானி |
| வா்த்தகம் | ஜோ. ஸ்ரெலா | ஜோ. தேனுகா | ஆ. அனோஜா |
| குடியியல் | ச.சஞ்சிகா | தே.நிஷானி | ஞா. பிரவீனா |
| ஆங்கிலம் | ஜோ. தேனுகா | ஜோ. ஸ்ரெலா | சு. தபோதினி |
| சுகாதாரம் | தே. நிஷானி | | |
| ம . பொருளியல் | ஜோ. டிலக்ஷனா | | |
| ICT | ஜோ. ஸ்ரெலா | | |
| நடனம் | ஜோ. தேனுகா | | |
| சங்கீதம் | ச.சஞ்சிகா | | |
| சித்திரம் | ஞா. பிரவீனா | | |

## வகுப்பு ரீதியில் முதல்நிலை மாணவர் விபரம்

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| அ. மேரி ஜக்குலின் | 01 |
| இ.கனிஸ்தியா | 02 |
| ற. பரணிகா | 03 |
| அ.டிலானி | 04 |
| தே. கிசாணி | 05 |
| வ.மதுசியா | 06 |
| யே. வர்சிகா | 07 |
| த.நாகதுளசிகா | 08 |
| யூ. மேரிடயானி | 09 |
| ஜோ. ஸ்ரெலா | 10 |

## மாணவர் வரவு

| மாணவர் பெயர் | தரம் |
| --- | --- |
| அ. சஹானா | 01 |
| இ. கனிஸ்தியா ஜெ. ஜீன்ஜெனிபா | 02 |
| தே. டிபின்சி | 03 |
| கி. மேரிகிறசில்டா | 04 |
| வி. திரிஷா | 05 |
| வா. எப்சிபா | 06 |
| அ. டிலக்ஷிகா | 07 |
| ரா. மெராயஸ் | 08 |
| ந. துலக்சி | 09 |
| அ. மேரி அனீஷா | 10 |

## 2016 ம் ஆண்டு க.பொ. சாதாரண தரத்தில் A சித்தி பெற்ற மாணவர்கள் விபரம்

| இல | மாணவர் பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| 01 | ச. சசிகலா | கத்தோலிக்கம் , தமிழ,விஞ்ஞானம் , கணிதம் வரலாறு ,குடியியல் , நடனம் |
| 02 | ஜெ. ஜெயநிஷாந்தி | கத்தோலிக்கம் , கணிதம் வரலாறு , குடியியல |
| 03 | கோ. பவித்திரா | கத்தோலிக்கம் , நடனம் |
| 04 | ஜெ. வினோஜா | கத்தோலிக்கம் , சங்கீதம் |
| 05 | அ.டிலக்ஷனா | கத்தோலிக்கம் |
| 06 | யோ. ஜெனிஸ்ரலாபிறின்சி | கத்தோலிக்கம் |
| 07 | சி. லுதர்சனா | கத்தோலிக்கம் |
| 08 | அ. மரியஜெயந்திரா | கத்தோலிக்கம் |
| 09 | கி. மேரிகிலிண்டா | கத்தோலிக்கம் |
| 10 | சூ. மயூரா | கத்தோலிக்கம் |
| 11 | த. நிர்மலாமேரி | கத்தோலிக்கம் |
| 12 | இ. ரஜிகலா | கத்தோலிக்கம் |
| 13 | தி.திஷாந்தினி | கத்தோலிக்கம் |
| 14 | து. துஷாந்தினி | கத்தோலிக்கம் |
| 15 | த.இந்துஜா | கணிதம் |
| 16 | ரா. கஜிந்தா | மனைப் பொருளியல் |

## இணைப் பாடவிதான செயற்பாடு பரிசில் பெறுவோர்

| தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|
| 02 | ந.ஹம்சாயினி | சித்திரம் | கோட்ட மட்டம் - 01<br>வலய மட்டம் - 03 |
| 03 | ஸ். ஸ்ரீபிகா | பாடல் | கோட்ட மட்டம் - 01<br>வலய மட்டம் - 01<br>மாவட்ட மட்டம் - 01 |
| 04 | அ. டிலானி | வினாடி வினா | கோட்ட மட்டம் - 03 |
| | ஜோ. நிதர்சனா | சித்திரம் | கோட்ட மட்டம் - 02 |
| | செயறபட்டு மகிழ்வோம் குழு | | கோட்ட மட்டம் - 01 |
| 05 | ஜோ. பிறிண்டா | இசையும் அசையும் | கோட்ட மட்டம் - 01<br>வலய மட்டம் - 02 |
| | தே. கிசாணி | எழுத்தாக்கம் | கோட்ட மட்டம் - 01 |
| | | இசை | பிரதேச மட்டம் -01 |
| | பி. கிபிசாளினி | உறுப்பெழுத்து | பிரதேச மட்டம் -01 |
| | செயறபட்டு மகிழ்வோம் குழு | | கோட்ட மட்டம் - 01<br>வலய மட்டம் - 01 |

## தமிழ்த்தினப் போட்டி

| தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|
| 05 | தே. கிஷானி | கட்டுரை | கோட்ட மட்டம் - 01 |
| 08 | | குழு இசை | கோட்ட மட்டம் - 01<br>வலய மட்டம் - 03 |
| | | பண்ணிசை | கோட்ட மட்டம் - 01 |
| 09 | இ.பவதாரணி | | கோட்ட மட்டம் - 02<br>வலய மட்டம் - 02 |

## விளையாட்டுப் போட்டி

| மாணவர் பெயர் | பிரிவு | விடயம் | அடைவு |
|---|---|---|---|
| ஜெ. ஜெரின்எப்சிபா | 13 | 100 M,200 M ஓட்டம் | வலயம் - 01 |
| சொ. சர்மிகா | 13 | 100 M ஓட்டம் | வலயம் - 03 |
| க. எப்சிபா | 15 | 100 M,200 M ஓட்டம் | வலயம் - 02 |
| அ. தாரணி | 15 | குண்டு போடுதல் | வலயம் - 01 |
| வி .ஜஸ்வர்யா | 15 | தட்டு எறிதல்<br>ஈட்டி எறிதல் | வலயம் - 02 |
| வி .சறோஜினி | 17 | 400 M,800 M ஓட்டம் | வலயம் - 02 |
| | | 1500 M ஓட்டம் | வலயம் - 01 |
| 13 வயதுப் பிரிவு அஞ்சலோட்ட அணி | | | வலயம் - 01 |

மனைப் பொருளியல் - விஞ்ஞான அறிவுப் போட்டி மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டோர்

- இ. கஜிந்தா
- கி. கிலிண்டா
- கோ. சுஜிதா
- இ. றஜிகலா
- தி. திஷாந்நினி

## English Day Competition

| No | Name | Grade | Dictation | Copy Writing | Cursive Writing | Creative Writing | Recitation | Reading | Story telling |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Ramesbsbu paranitha | 03 | D 1 | | | | | | |
| 02 | Steepensan Steepika | 03 | D 3 | | | | | D 3 | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | Vinfred Kunaseelan mary Lithvina | 04 | | | | | D 1 | | |
| 04 | Joseph Fernando Printa | 05 | | | | | | D 1<br>Z 3 | |
| 05 | Palachchandran Srivaisnavi | 05 | | | | | | D 1<br>Z 3 | |
| 06 | Piranavan Kipisalini | 05 | D 2 | | | | | | |
| 07 | Umasuthan Samsiya | 05 | D 3 | | | | D 3 | | |
| 08 | Subas Surenthiran Judit Pirutha | 06 | | | | | | | D 1<br>Z 1 |
| 09 | Varatharaja Mathusiya | 06 | | D 1<br>Z 1 | | | | | |
| 10 | Yogeswaran Rujitha | 06 | | D 3 | | | | | |
| 11 | Kodeeswaran Nithusa | 07 | D 3 | | | | | | |
| 12 | Jesuthasan Varsika | 07 | | D 3 | | | | | |
| 13 | Jeyanilavan Jerinepsipa | 07 | | | | | D 2<br>Z 2 | | |
| 14 | Solaman Sarmiga | 07 | | | | | | | D 1<br>Z 1 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | Vaheesan Kirupajini | 08 | | | | | D 1 | | |
| 16 | Ramanathan Lenuka | 08 | | | | | D 3 | | |
| 17 | Rameswaran Devina | 08 | | | | D 1<br>Z 1 | | | |
| 18 | Laxman Dorinmary | 08 | | | | D 2 | | | |
| 19 | Suthakaran Jasmin | 08 | | D 1<br>Z 1 | | | | | |
| 20 | Christian Mary Keerthika | 08 | | D 2 | | | | | |
| 21 | Jagin separajan Mary Dayani | 09 | D 1<br>Z 1 | | | D 1 | | D 2 | |
| 22 | Anton Jenimariya | 09 | | | | | D 2<br>Z 2 | | |
| 23 | Elamaran Pavatharani | 09 | | | | | D 3 | | D 2<br>Z 2 |
| 24 | Jorge Fernando Thenuka | 10 | | | | | D 3 | | |
| 25 | Mariasekaran Mareen Mathumika | 10 | | | D 3 | | | | |
| 26 | Tharmathasan Inthuja | 11 | | | D 3 | | | D 2 | |
| 27 | Kopal Pavithra | 11 | D 3 | | | | | D 3 | |

# பாடசாலைக் கீதம்

மேரிஸ் பெண் சாலையைப் பாடுவோம் வாரீர்
தாய் மரி சேவையைப் போற்றுவோம் வாரீர்
(மேரிஸ் பெண் சாலையை)

(I) காவலூர் கன்னியர் கலங்கரை ஒளியே
கல்வியை கனிவாக காட்டருள் வழியே
கடமைசெய் கனிகளையே பொழியும் நல்மரமே
கன்னியெம் நெஞ்சத்தில் நிறைந்திடும் மனையே
(மேரிஸ் பெண் சாலையை)

(II) அருள்மிகு தாய்மரி பெயர்புனைக் கூடம்
அதிபர் ஆசான் ஆயர் அன்பு செய்மாடம்
அயராத இவர் சேவை எமக்கன்புப் பாடம்
அனைவரும் சமமாக வாழ்கின்ற கோட்டம்
(மேரிஸ் பெண் சாலையை)

**வித்தியாலயத்தின் சிறந்த மாணவி**
**செல்வி யோசப்பெர்ணாண்டோ ஸ்ரெலா**

**வித்தியாலயத்தின் சிறந்த ஆசிரியர்**
**செல்வி அருள்நேசதாசன் பிறேமலா**
(ஆரம்பக்கல்வி)

**லீவு குறைந்த ஆசிரியர்**
**செல்வி அஞ்சலாமேர்சி யோசெப்ராஜா**












2016



